www.tamilarangam.net

மனிதன்
(7.78)

# மாரீசன்கூடலில் நடந்தது என்ன?

[தமிழ் ஈழத்தின் சங்கானை, காங்கேசன்துறை காவல்துறைகளின் (பொலிஸ்) பிரிவின்கீழ் அடங்கும் மாரீசன் கூடலில் 13-06-78 செவ்வாய்க்கிழமை யன்று நடந்த சாதிபிரச்சனையை கருவாக கொண்டு இரு சமூகங்களை சேர்ந்தோரிடையே ஏற்பட்ட மோதலில் இருவர் உடன் உயிர் இழந்தனர். நால்வர் காயம் அடைந்தனர். இளவாலை, சித்திர மேழி, விளான் மாதகல் போன்ற மாரீசன்கூடலைச் சூழவுள்ள கிராம பகுதிகளில் சாதிப் பிரச்சனையை கருவாக கொண்டதாகவும் துப்பாக்கி பிரயோகத்தை கொண்டதாகவும் இதுவே முதல் தடவையாக நடந்துள்ளது. இவ்வாறு உயிர் இழப்புகளுக்கும் உடல் ஊறுகளுக்குமான காரணத்தை சிறிது ஆராய்வோம் ]

குறிப்பாக சங்கானை காவல் துறையினரின் பெரும் பகுதியை உள்ளடக்குகின்ற மாரீசன்கூடலில் தற்போதைய தமிழ் சமூக அமைப்பின்படி மூன்று சமூகத்தவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர்கள் ஒரு பிரிவாகவும் ஏனையோர் ஒரு பிரிவாகவும் வாழ்ந்து வருகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியை கோடாலிக்காடு என அழைப்பர். இச் சம்பவத்தில் பங்கு கொண்டதாக கருதப்படும் உயர் சமூகத்தவர்கள் வாழும் பகுதிக்கும் மேற்படி கோடாலிக்காட்டுக்கும் (ஊரின் மேற்கு) இடைத்தூரம் 500 யார்களுக்கு [illegible]மற்பட்டதாகும் கோடாலிக்காட்டில் வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களிடையே மத அடிப்படையில் இரு பிரிவுகள் உண்டு! அதாவது கத்தோலிக்க மத தாழ்த்தப்பட்டோர், இந்து மத தாழ்த்தப்படடோர். மேற்போந்த இரு மதத்தோரிடையேயும் நெருங்கிய உறவுகள், தொடர்புகள் இருந்து வந்திருக்கவில்லை, காணப்படவுமில்லை. கிறிஸ்தவ தாழ்த்தப்பட்டோரில் கல்வியறிவுள்ளவர்களும், உயர் கல்வி கற்பவர்களும் சிந்திப்பவர்களும் உளர். இவர்கள் உயர் சமூகத்தவரோடு நெருங்கிய தொடர்பு அற்றவர்கள். அடுத்து இந்து மத தாழ்த்தப்பட்டோரில் கற்றவர்களும், அரச ஊழியர்களும் உயர் கல்வி கற்பவர்களும் எவரும் இல்லை. 5ம் வகுப்புக்குமேல் கற்றவர்களும் கற்பவர்களும் இன்று வரை எவருமே இல்லை. இவர்கள் உயர் சமூகத்தவரோடு நெருங்கிய தொடர்பு உள்ளவர்கள்: இவர்கள் உயர் சமூகத்தவரை அண்டி அவர்களுடைய நிலபுலங்களில் வேலை செய்து பிழைத்து வாழ்ந்து வருபவர்கள். தற்போது இவர்களில் ஒரு சிலர் தங்களது குடியிருப்புக்களையும் பயிர்ச்செய்கை காணிகளையும் சொந்தமாக வைத்துள்ளனர் என்பது குறிப்பிடதக்கது. கிறிஸ்தவ தாழ்த்தப்பட்டோரில் இருவர் மூவர் உயர் சமூகத்தவருடைய நிலபுலங்களில் செய்கை [illegible] வருமானம் பெறுபவர்களும் ஆவர். கிறிஸ்தவ தாழ்த்தப்பட்டோருக்கும் உயர் சமூகத்தவருக்கும் இடையில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக குறிப்பிடதக்கதாக எதுவித கைகலப்பும் சண்டை சச்சரவும் நிகழ்ந்ததில்லை.

முக்கியமாக இந்துமத தாழ்த்தப்பட்டோர் பன்னெடுங் காலமாக உயர் சமூகத்தவரால் தொடர்ந்து சுரண்டப்பட்டு வந்தனர். சுரண்டல் நானுவித வழிகளாலும் இடம் பெற்று வந்தது. கல்வி, ஆற்றல், திறமை, உழைப்பு, விவேகம், நிலம், பணம், பொருள் அனைத்தும் இடம் பெற்று வந்தன. சுரண்டல் தொடர்ந்த சுரண்டலாகவும் முழு நிறைவான சுரண்டலாகவும் இருந்து வந்தது இந்துமத தாழ்த்தப்பட்ட ஆடவர் உயர்சமூக இளைஞரால் பலமாக தாக்கப்படுவதும் இங்கு குறிபபிடத்தக்கது.

இவ்வாறு 20ம் நூற்றுண்டின் சமூக அடிமைத்தனம், கயமைத்தனம், ஏகாதிபத்தியம், பயங்கரமான முறையில் கொடூரமாக வெளியுலகுக்குத் தெரியாமல் மூடிமறைக்கப்பட்டு தன் நாடகத்தை தொடர்ந்து இந்த மூலையிலும் தலைவி[illegible]த்து அரங்கேற்றிக்கொண்டு இருக்கும் வேளையில் தாழ்த்தப்பட்டோரில் முழுமை பெற்ற ஒடுக்கப்பட்டவரான இந்துமத தாழ்த்தப் பட்டோரிடையே உள்ள ஒரு சில இளைஞர்களுக்கும் கிறிஸ்தவ இளைஞர்களுக்கும் (தாழ்த்தப்பட்ட) இடையில் இணைப்பு ஏற்பட்டு இரு பகுதியும் சேர்ந்த சனநிலையம் உருவாகின்ற பரிணமிப்பு ஏற்பட்டது.

எல்லாம் இவ்வாறு நடை பெற்றுக் கொண்டு இருக்கும் பொழுது இவ்வருட மாசிமாத அளவில் ஒருநாள் உயர் சமூகத்தை சேர்ந்த இளைஞர் சிலர் இரவு வேளையில் மது அருந்த தாழ்த்தப்பட்டோர் வாழுகின்ற மேற்படி கோடாலிக்காட்டுக்கு சென்றனர். இவர்கள் இங்கு மது அருந்திக் கொண்டிருக்கும் பொழுது இவர்களோடு கூட வந்த உயர் சமூக இளைஞன் இந்துமத தாழ்த்தப்படட ஒரு குடும்பத் தகராரில் அநாவசியமாக தலையிட்டார். இதனுல் மேற்படி குடும்பத் தலைவனுல் நையப் புடைக்கப்பட்ட அவ்வுயர் சமூக இளைஞனுக்கு சிறு காயம் ஏற்பட்டது.

பின்பு பங்குனி மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் உயர்சமூக வாலிபனுக்கு தற்செயலாக காயம் ஏற்படுத்திய தாழ்த்தப்பட்ட குடும்பத் தலைவனை தாக்குவதற்கு உயர் சமூக இளைஞர் சிலர் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழுகின்ற பகுதியான கோடாலிக்காட்டிற்கு சென்றனர். இவர்களை கண்டதும் குடும்பத் தலைவன் பயந்து ஒரு கிறிஸ்தவ தாழ்த்தப்பட்ட வீட்டில் அடைக்கலம் புகுந்தார். தாக்க வந்த உயர் சமூக வாலிபர்கள் மேற்படி கிறிஸ்தவ வீடு புகுந்து தாழ்த்தப்பட்ட ஆடவனை பயங்கரமான முறையில் தாக்கினர். பயங்கர தாக்குதலுக்குள்ளான ஆடவன் உடன் வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டார். அன்று இவருடைய நிலைமை கவலைக்கிடமாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மாரீசன்கூடலில்.........

அமைந்திருந்தது. இது மத்தியானம் நடந்து முடிந்தபின்பு அன்றிரவு சில உயர் சமூக இளைஞர்கள் அதே கோடாலிக்காட்டிற்கு மமதையின் மொத்த உருவமாக மது அருந்தும் தோரணையில் சென்றனர். இவர்களாகவே தாழ்த்தப்பட்ட இளைஞர்களுடன் தகராறை தொடங்கி கைகலப்பில் ஈடுபட்டனர். இதன் விளைவாக கைகலப்பில் ஈடுபட்ட உயர் சமூக இளைஞர்கள் இருவர் பலத்த காயத்திற்குள்ளானார்கள்.

கடந்த ஆனி மாதம் 13ம் திகதி செவ்வாய்கிழமை மாலை நாலரை மணியளவில் 20க்கு மேற்பட்ட இளைஞர்கள் பயங்கர ஆயுதங்களான துப்பாக்கி, கைக்குண்டு முதலியன கொண்டு தாழ்த்தப்பட்டோர் வாழும் பகுதிக்குச் சென்றனர். இவர்கள் தாங்கள் கொண்டு சென்றவைகளை பரீட்சிக்க தொடங்கினர். முதன் முதலாக கள்ளுத்தவறணைக்கு கைக்குண்டு வீசப்பட்டது கிறிஸ்தவ தாழ்த்தப்பட்ட வீடு ஒன்றுக்கும் கைக்குண்டு வீசப்பட்டது. இவர்களைக் கண்டதுமே இந்துமத தாழ்த்தப்பட்டோர் பலர் பயந்து ஓடி அப்பால் மறைந்து கொண்டனர். சில இந்து ஆடவர்களும் பெண்களும் பிள்ளைகளும் கிறிஸ்தவ தாழ்த்தப்பட்ட வீடுகளில் அடைக்கலம் புகுந்தனர். உயர் சமூக இளைஞர்களின் இந்து மத தாழ்த்தப்பட்ட பகுதியிலான அட்டகாசம் முடிவடைந்து திரும்பிவரும்பொழுது கிறிஸ்தவவீடுகளை தாண்டி இந்து மதத்தோரிடையே செல்லவேண்டும்) கிறிஸ்தவ வீடுகள் ( தாழ்த்தப்பட்ட இந்து மக்களுக்கு அடைக்கலம் கொடுத்த) மீதுகல்லெறிந்து தங்கள் அட்டகாசத்தை தொடங்கினர். இவர்களுடைய அட்டகாசம் தொடங்கி செக்கன்கள் மறைந்து நிமிடங்களாகும் பொழுது உயர் சமூகத்தைச் சேர்ந்த, முன்பு காயம் அடைந்த சகோதரர்களின் தந்தையும் தம்பியும் உடன் ஸ்தலத்திலேயே கொல்லபட்டதோடு மூவர் பலத்த காயங்களுக்குள்ளானார்கள். இத்துடன் யாவும் முற்றுப்பெற்று பின்பு பூரண அமைதி நிலவியது; இதைத் தொடர்ந்து சங்கானை காவல் துறையினரால் இங்கு தற்காலிக காவல் நிலையம் அமைக்கப்பட்டது. இவ்வாறு அங்கு சென்ற நிருபருக்கு நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### குறிப்புகள் :-

இதற்கு காரணங்களாக மனிதனின் கீழ்த்தரமான உணர்ச்சிகள் இனம், மதம், மொழி, நிறம், கௌரவம், குலம், கோத்திரம், குடும்பம், பரம்பரை, தன்னுதிக்க உணர்ச்சிகள், போன்றவையும், உயர் சமூகத்தவரிடையே முற்போக்கு எண்ணம் படைத்த எவரும் இல்லாமையும், முன் வராமையும், குறிப்பாக இளைஞர்கள் எவரும் இல்லை என்பதும், தாழ்த்தப்பட்ட மக்கள் நன்றாக தங்களை தாழ்த்திக் கொண்டதும், அவர்களிடையே தாறுமீதமான அறியாமையும் ஆகும்.

இங்குள்ள கிறிஸ்தவ தாழ்த்தப்பட்ட மக்கள் குறைந்த தொகையினர்: கிட்ட தட்ட 12 குடும்பங்கள் வரை எனலாம். இந்துமத தாழ்த்தப்பட்டோர் கூடிய தொகையினர் 35 குடும்பங்களுக்கு மேற்பட்டோர். மாரீசன் கூடலுக்கு தெற்காகவும் இளவாலைக்கு தென் மேற்காகவும் உயரப்புலம், வாதமணக்கி என்ற பகுதியில் இந்துமத தாழ்த்தப்பட்டோர் வாழ்கின்றனர்,

உயர் சமூக இளைஞரால் ஏற்படுத்தப்பட்ட அட்டகாசத்தால் தாழ்த்தப்பட்டோரை சேர்ந்தவர்களுக்கு குறிப்பிட தக்கதாக உயிர், உடல் சேதங்களோ பொருள் சேதங்களோ ஏற்படவில்லை.

இது தொடர்பாக பதில்மர் (தாழ்த்தப்பட்டோர்) யாழ் சிறையில் விசாரணைக் கைதிகளாக உள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்